REGD No M. 4642

# திராவிடநாடு

விலை அணா 2. சிலோன் 15 சதம்

மலர் 10 | 24—2—52 | இதழ் 34

# ‘சாவார்’, சுமந்து!

“சேத்தாரைச் சாவார் சுமந்து!”

*

கூறுவது “நாலடியார்” நூல்; ...மல்ல! செத்துப்போன ...லத்தை, சாகப் போபவர்கள், ...க்கிக் கொண்டு புறப்படுவாராம்— ...துத்துணி போர்த்தி, மாலேசூட்டி. ...தைப்போல ஆகியிருக்கிறது, இன்றைய காங்கிரஸ் தலேவர்களின் ...லே.

...தேர்தலுக்குப்பிறகு, காமராஜர், பேசிவருகிருர் இப்படி:

நம்மிடையே உள்ள வேற்றுமை களை ஒழித்து ஒன்ருவோம்.

ஸ்தாபனத்தை பலப்படுத்துவோம் —நான் வேண்டுமானல் ராஜிஞமா செய்கிறேன்.

*  *  *

நம்பிக்லகை இழந்துவிட்ட காங் கிரசை, இந்த ‘நல்லவர்கள்’ பலப் படுத்தப் போகிருர்களாம்—‘பிரேத விசாரணே’ போல, பேசித் திரிகி ருர்கள். பாபம்! உண்மையை அவர் கள் உணரவேண்டும்.

காங்கிரஸ், மக்சள் மன்றத்தின் முன், ஒரு திட்டத்தை வைத்தது. அந்தத் திட்டப்படி காரியங்கள் நடைபெற்ருல் நாடு நலமடையும் என்று மக்கள் நம்பினர், முன்பு; தேர்ந்தெடுத்தும் அனுப்பினர்.

ஆனல், இன்று! அந்தத் திட்டம், பயனற்றது. வாழ்க்கைக்கு ஒவ்வா தது — பிற்போக்கு எண்ணங்கள் கொண்டது — ஏழைகளுக்கு இன் பம் பயக்காது — என்று மக்கள் உணர்ந்து விட்டனர்.

“காங்கிரஸ் காட்டிய வழி” பயன் தராது—என்ற மனோபாவம், மக் களிடையே மலர்ந்து விட்டது. தங் கள் வயிறு நிரம்ப, குடும்பம் வாழ ‘புதுவழி’ விரும்புகிருர்கள்-பழைய பாதையை நம்பி ஏமாந்தோம் என்று, அறிந்து கொண்டதால்.

மக்களின் உள்ளம், காங்கிரஸ் நடாத்திய கொடுமை ஆட்சியால், மாறிவிட்டது. காங்கிரஸ் காட்டும் பாதை, முதலாளிகளின் சுகபோகத் துக்குத்தான் பயனுகும். பழைமை விரும்பிகளின் பாசறை, அது. சமு தாயக் கட்டுக்கோப்பு கலேக்கப்படா மல், மாடி மாடியாகவும், குடிசை குடிசையாகவும், இருக்கவேண்டும் என்பதே ‘ராம ராஜ்ய திட்டம்’ என்பதை மக்கள் மன்றம் உணர்ந்து விட்டது.

காங்கிரசின் பொருளாதார திட் டமும் சரி, அரசியல் பாதையும் சரி, சமுதாய லட்சியமும் சரி, ‘இப்போதுள்ள முறை அப்படியே இருக்கவேண்டும்’ என்பதுதான்.

ஆனல், சமுதாயம் இந்த கொள்கையை இனியும் ஏற்காது! பழைமை ஒழிந்து, புதுமை காணத் துடிக்கிருர்கள்—மக்கள். பொருளா தார பேதம் ஒழிந்து, அரசியல் சுதந்திரம் மலர்ந்து, சமுதாய தாழ்வு உயர்வு அகன்று, ‘புது உலகு’ காணத் துடிக்கிருர்கள்.

இந்த அடிப்படை மாற்றத்தை அறியவில்லே, தேசிய தலேவர்கள். பழைமையின் சின்னமாம் காங்கிர சுக்கு பராக்கு கூறுகிருர்கள்! ‘பழைய நிர்வாகிகளுக்குப் பதில், கமிட்டிகளேத் தேர்ந்தெடுத்து, பணியாற்றப் போகிருர்களாம். ‘புது இரத்தம்’ பாய்ச்சினுர் நேரு. அதிர்ச் சிவைத்யம், செய்தார். ஆனல், பலன்! மக்கள், கரிபூசிவிட்டார்கள், காங்கிரஸ் முகத்தில்.

தோல்விக்குப்பிறகு, ஞானோ தயம், ஏற்பட்டிருக்கிறது காம ராசருக்கு—சொல்கிருர் “காங்கிரஸ் தோற்றதற்கு நானே காரணம்” என்பதாக. இந்த உண்மையை இவர் சொல்லித்தான் மக்களுக்கு தெரிய வேண்டுமென்பதில்லே. காமராஜரின் கூடாரம் அறியும்! அவரது திருக்கூற் றில் ‘நானே’ என்பதற்குப் பதில் ‘என்போன்ருர்’ என்று இருப்பதே பொருந்தும். இத்தகைய பிற் போக்கு ஞானோதயங்கள், இனி மேல், பலப்படுத்தப் போகிருர் களாம் — பல்விழுந்து, நரைத்து, உயிரும் இழந்து, பிணமாகிவிட்ட காங்கிரஸ் உடலே! ஐயோ, பாவம்! செத்தாரைச் சுமந்து இனி ‘சாவார்’ புறப்படுகிருர்கள்!! பிணம், உயிர்பெறும்? காங்கிரஸ் புது நிலேயா, அடைய முடியும்?

# அணையும் 'ஜோதி'

—

## அட்டகாசப்படலமா?

—

### கோவையில் வெறியாட்டம்

தூயர முகத்தோர், துடுக்குத்தனத்தில இறங்கியிருப்பதாக, கோவை நகர திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயலாளர் தந்திருக்கும் தகவல் மூலம் அறிய வருகிறோம்.

வேண்டுமென்றே நமது கழகத் தோழர்களை வம்புக்கிழுத்து, 'தேனீ' முறைகளைக் கையாளக் கிளம்பியிருக்கின்றனர்—தேசீய வீரர்கள்.

கடந்த 12—2—52 அன்று, கோவை நகர தி. மு. க. அலுவலகத்தில் பறந்துகொண்டிருந்த கழகக் கொடியை எரித்தும், தெப்பகுள மைதானத்தில் இருந்த கழகக் கொடி மரத்தை வெட்டி வீழ்த்தியும், கழகத் தோழர்களைக் 'காட்டு முறை'யில் தாக்கியும், நடந்துகொண்டிருக்கிறார்கள் 'காங்கிரஸ்' கண்ணியர்கள்.

இந்த விஷயங்களை தேசிய இதழாம் 'தினமணி' பின்வருமாறு வெளியிட்டிருக்கிறது.

"பிப்ரவரி மாதம் 12ந்தேதி சௌடாம்பிகை அம்மன் தெப்பக்குளத்திற்கு சமீபமாக ஊர்வலமாக எடுத்துச்செல்லப்பட்டது. திராவிட முன்னேற்றக்கழகத்தைச் சேர்ந்த சிலர் தம்மீது சாயத்தண்ணீர் தெளிக்கக்கூடாது என்றனர். ஆனால் ஊர்வலக்காரர்கள் கட்டாயப்படுத்தி சாயத்தண்ணீரை அவர்கள் மீது தெளித்தனராம், பிறகு அவர்களை அடிக்கவும் செய்தார்களாம். அவர்களுடைய தூரியாலயத்திலிருந்த கொடிபிடுங்கி எறியப் பட்டதாம், சொத்துக்களுக்கும் சேதம் விளைக்கப்பட்டதாம்"

'தினமணி'யே இந்த அளவுக்குச் செய்தி தந்திருக்கிறது—நம் மீது குற்றச் சாட்டுகளை வீசுவதையே குணத் தொழிலாகக் கொண்ட இதழே, இந்த அளவுக்குச் செய்திகளை வெளியிட்டிருக்கிறதென்றால், கோவையில் எவ்வளவு கொடுமைகள் நடைபெற்றிருக்கவேண்டும்!

தோல்விகளைக் கண்டதால், இது போன்ற காட்டுமுறையில் நடக்கத் துவங்கியிருக்கும் காங்கிரஸ்காரர்களின் போக்கு கண்டு பரிதாபப்படுகிறோம். கைக்கு கை, பதிலுக்குப் பதில், அடிக்கு அடி என்ற பாதையில் தாக்கப்பட்டோரும் ஈடுபடத் துவங்கினால், விளைவு என்ன ஆகும் என்பதை, வெறிக்கு ஆட்பட்டோர் சிந்திக்கவேண்டும் அரசியல் வாழ்வு, அறிவால், ஆக்கப்படவேண்டும்; தடியால் அல்ல; நீதியால் நிலை நிறுத்தப்படவேண்டும்—நீளும் வெறியால் அல்ல. அக்கிரம வேலைகளுக்கும், 'அடியாள்' முறைக்கும் அரசியல் வாழ்வினர் ஈடுபட்டுவிட்டால், விளைவு விபரீதமாகும்.

தோல்விகளைக் கண்டதால் துயரமுகத்தோராயிருப்போருக்கு ஆத்திரம் வரலாம். ஆனால், அறிவையும் விலைக்கு வாங்குமளவுக்கு, வருமென நாம் எதிர்பார்க்கவில்லை. எனவே, அவர்களின் பரிதாப நிலைக்கு வருந்துகிறோம். கல்லும் மண்ணும், தீயும் அரிவாளும்—வீசியதன் பலனை அனுபவிக்கும் உங்கள் பாதை, மீண்டும் தொடருமேயானால், மக்கள் மன்றம், நிச்சயம் மண்குழியில் தான் தள்ளும் உங்களது அரசியல் எதிர்காலத்தை. நாடு, காடாக்கும் திருப்பணியில் இறங்காதீர்கள் — அதற்கு 'நாலு கால்' உடையவை, நிறைய இருக்[illegible]ண்டாம், விபரீதம்! என்று துயர முகத்தோருக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்,

காங்கிரசாரின் தாக்குதலுக்கு உள்ளான நமதுகழகக்காளைகளுக்கு நமது அன்பையும், மதிப்பையும் தெரிவித்துக்கொள்ளுகிறோம். தியாகத்தால் வளர்வது நமது கழகம் எனும், உண்மையை அறிந்த அந்த உத்தம நண்பர்களின் உடம்பிலே வழிந்த இரத்தம் — இந்த நாட்டு பாசிச வெறியருக்குத்தரப்பட்ட காணிக்கையாகும், அவர்தம் கண்யத்துக்கும், கடமைப் பொறுப்புக்கும் நமது பாராட்டுதல்கள்.

* * *

"மேற்படி கலவரத்துக்குக் காரணமாயிருந்தவர்களையும் கலவரம் செய்தவர்களையும் கைது செய்[து] நீதிமுன் அவர்களை நிறுத்தவேண்[டு]மென்று கோவைமாவட்டபோலீ[ஸ்] அதிகாரிகளை கேட்டுக்கொள்[கி]றோம்." என 18—2—52 அ[ன்று] கோவை தி. மு. கமிட்டி ஒரு [தீர்]மானம் நிறைவேற்றியிருக்கிற[து]. இத்தீர்மானத்தை, நாமும் வலி[யுறு]த்துகிறோம். "ஆட்சி பீட[த்தில்] இருப்போர், அவராயிற்றே" என்[ற] அலட்சியம், அதிகாரத் துறைவ[ர்க]ளின் மத்தியில் மலருதல் கூடாது எ[ன்]பதை, இந்த நேரத்தில், சம்பந்[தப்]பட்ட அதிகாரிகளுக்குத் தெரிவி[த்]துக்கொள்ள விரும்புகிறோம்.

ஏனெனில், 17—2—52 அன்[று] தி. மு. க. வினர் நடத்தவிருந்[த] கூட்டத்துக்கு 144 தடையுத்திர[வு] போட்டு, மக்களின் பேச்சுரிமை பறிக்கப்பட்டிருக்கிறது கோவையில்.

கோவை தெப்பகுளம் மைதானத்தில் அன்று கூட்டம் நடத்த வதென முடிவு செய்து, கழக[ச்] செயலாளர், ஒலிபெருக்கி வைப்ப[த]ற்கான அனுமதியைக் கேட்டிருக்கிறார்—அதிகாரிகளிடம். அனும[தி] மறுக்கப்படவே, ஒலிபெருக்கி இல்லாமலே, குறிப்பிட்ட நேரத்தில் கூட்டத்தைத் துவக்கியிருக்கிறார்கள்—தோழர்கள். அப்போது அதிகாரிகள் வந்து 144 உத்திரவைக் கூறி, கூட்டம் நடைபெறக்கூடாது என்று தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் கழகத்தின் 'பேச்சுரிமைப் போராட்டம்' தீர்மானத்தையொட்டி, தோழர்கள், அறவ[ழி]யில் தமது முடிவை, காங்கிரஸ் ஆட்சி அம்புகளிடம் தெரிவித்திருக்கின்றனர். 144ஐமீறி மக்கள் உரிமையை நிலைநாட்டச் சென்ற, தோழர்கள் S. A. ராசமாணிக்கம் (கோவை மாவட்ட செயலாளர்) K. சிவசாமி M. K. A. நடராசு, C. T. தண்ட[ர]பாணி, ஜானகிராம், சி. வெ. முத்[து] ஆகியோரை கைது செய்திருக்கிறார்கள்—காங்கிரஸ் பீடத்தார். அவர்களைத் தொடர்ந்து மேடை நோக்கிச்சென்ற பலரைத்தூரத்திவிரட்டினரென்றும் அறிய வருகிறோம்.

பேச்சுரிமை பறிக்கும் இந்த[ப்] பேதப்புத்தியை காங்கிரஸ் ஆட்சி அணையப்போகிற இந்த நேரத்[தில்]

(அடுத்த பக்கம் பார்க்க)

முன் பக்கத் தொடர்ச்சி

...ம், விடவில்லை. மக்களின் அடிப்படை உரிமைக்கு தீ வைக்கும்இந்த சித்திரச் செயலில் இன்னும், அவர்கள் ஈடுபடுவதை நல்லாட்சி விரும்புவோர் ஒரு சிறிதும் அனுமதியார்.

144 களைவீசி, 'குன்றத்தூர், நடத்தி, நாரணமங்கலம் காட்டி, சிறைகளை நிரப்பி. 'சித்தையன் கோட்டை' யில் வழக்குத்தொடர்ந்து, விசித்திர வெறியாட்டம், நடத்திய காங்கிரஸ் பீடத்துக்கு, மக்கள் மன்றம், எச்சரிக்கை தந்திருக்கிற நேரம் இது.

எச்சரிக்கையைக் கண்டதால் எரிச்சல் கொண்ட காங்கிரஸ்பீடம், துயரமுகத்தோடு துப்பாக்கியை ஒரு பக்கம் நீட்டி 'அடக்குவோம் உமை என்று அதிகாரமூலம் மிரட்டுவதும்; மற்றோர் பக்கத்தில் கூலிகளையும் ஏவலாட்களையும் ஏவி 'கோதா'வில் இறங்குவதும்—மிக மிக அநாகரீகம் நிரம்பிய செயலாகும்.

அதிகாரம் ஒருபக்கம்—அடியாட்கள் மற்றோர்பக்கம். இந்த 'கோணங்கிச் சேஷ்டை' சரிந்து போன காங்கிரசைக் காப்பாற்றாது. தடுக்குத்தனதில் இறங்கும் துயரமுகத்தோர் இதை அறியவேண்டும்.

✯

## வ. உ. சி. மலர்

கப்பலோட்டிய தமிழர் எனப் போற்றப்படும் தியாகச்சிகரம் வ. உ. சிதம்பரனாரைப்பற்றி, பல தமிழ் எழுத்தாளர்களின் எழுத் தோவியங்கள், கொண்டு இந்த மலர் மிளிர்கிறது. பம்பாய்வாழ் தமிழர்கள், திருவாரூர் கருணாநிதி அச்சகமூலம், இம்மலரைத் தமிழுலகுக்குப் படைத்திருக்கிறார்கள்

விலை ரூ. 1—4—0.

தமிழக வீரரைப் பற்றி, மாதுங்கா, பம்பாய்த் தமிழ்ச் சங்கம், மேற்கொண்ட இம் முயற்சியைப் பாராட்டுகிறோம். பம்பாய் தமிழ்ச்செல்வர்கள் தொண்டு வளரட்டும்!

# சரித்திரப் பாதை

—'வில்'—

இந்தியாவிற்கு அவர் வந்தார்—ஆனால் ஒரு இந்தியாவை அவர் பார்க்கவில்லை. இந்தியாவைப் பார்க்க வேண்டுமென்றுதான் அவர் சைனா தேசம் விட்டுப் புறப்பட்டு, இங்கு வந்தார். இங்கு அவர் கண்ட இந்தியா ஒன்றாக இல்லை. ஐந்தாகப் பிரிந்திருந்ததைக்கண்டார். வட இந்தியா மேற்கு இந்தியா, கிழக்கு இந்தியா, மத்தியஇந்தியா, தென்னிந்தியா என ஐந்துஇந்தியாக்களை அவர் கண்டார். இந்த ஐந்து இந்தியாவிற்குள் அடங்கியிருந்த நாடுகளோ எண்பது. கி. பி. ஏழாம் நூற்றாண்டில், சைனயாத்திரீகர் ஹுவான் சுவாங் கண்டு, தம் குறிப்பில் காட்டியுள்ளார், இந்த உண்மைகளை.

சரித்திர ஏடுகளைத் தொட்டும் அறியாத சிலர், நம்மிடம் சரித்திரம் பேசும் பொழுதுதான் நமக்கு சிரிப்பு வரும்.

இந்தியா என்றுமே ஒன்றாகத் தானிருந்தது, அது பிரிந்தால் என்னாவது, உலகமே இருண்டுவிடாதா என்றெல்லாம் பேசுவார்கள், சிலர்; அவர்கள் சரித்திரத்தையே கரைத்துக் குடித்தவர்கள் போல! அவர்களுக்கு ஹுவான் சுவாங் என்ற பெயர் கூடத் தெரியாது. அவர் எழுதி வைத்த குறிப்புகள் இந்திய சரித்திரத்திற்கு எவ்வளவு பயன்படுகிறது என்பதும் தெரியாது.

நா, வரவர 'போலோ பாரத் மாதாகி ஜே' போட்டு விடுவதாலேயே, வரலாறு மாறிவிடாது.

இந்தியா என்றுமே ஒன்றாக இருந்ததில்லை. வெள்ளையர்கள் ஆட்சிக் காலத்தில் தான் அது ஒன்றாக இருந்தது. நாம் குறிப்பிடும் பொழுது ஒப்பாதவர்கள், சைன யாத்திரீகன் அன்றோர் நாள் எழுதி வைத்துள்ள குறிப்புகளைப் புரட்டிப் பார்க்கவேண்டும். அவர் ஏக இந்தியாவின் எதிரியல்ல—அல்லது நமது பிரச்சாரம் கேட்டு பேசுபவரல்ல. ஏழாம் நூற்றாண்டில் புத்த மார்க்க நிலை காண வந்த சந்நியாசி.

ஹுவான் சுவாங், இந்தியாவை ஐந்தாகப் பிரிக்கிறார். அதிலே அவர் தென்னிந்தியா என்று திராவிடத்தை அழைக்கிறார்.

அவருக்கு திராவிடநாடு திராவிடருக்கே என்ற ஒலி கேட்டதில்லை. பலப்பல ஆண்டுகளுக்கு முன்னாலே பவனி வந்த அவர், பிரிந்த இந்தியாவைப் பார்த்தார். குறிப்பில் இருந்தவிதத்தை எழுதினார்.

இந்தியாவைப் பிரிப்பதா, இது ஆகுமா என்று இன்று பேசுவோர், அன்று இருந்த நிலையை எண்ணிப் பார்க்கட்டும். பின் பிரிந்திடுவது சரியா என்று கூறட்டும்.

ஐந்து இந்தியாக்கள்
எண்பது நாடுகள்.

அன்று இருந்தன என்கிறார், சைன யாத்திரிகர். நாம் இன்று, பாகிஸ்தான் பிரிந்த பிறகு, உள்ள எஞ்சிய இந்தியாவில் திராவிடநாடு பிரிந்துவிடட்டும் என்கிறோம். இதனால் என்ன குறை வந்துசேர்ந்துவிடும் என்று கூறட்டும் அவர்கள்.

தலைவலிக்காக மண்டையைப் பிளந்து கொள்வதா, குழந்தையின் தாய் தான் தான் என்று இரண்டு பெண்கள் போட்டியிட்டுக் கொண்டால், குழந்தையை வெட்டி ஆளுக்கு ஒரு துண்டு கொடுக்கமுடியுமா என்று உதாரணங்கள் காட்டி, உரிமைக்குரலை அடக்க முடியாது.

இப்படி, அலங்கார உதாரணங்களால், பிரிவினை உணர்ச்சியை மாற்றிவிட முடியும் என்றால், பாகிஸ்தான் பிறந்திருக்காது. அதனை மறந்து, திராவிடநாடு கூடாது என்று இன்று கதை பேசுகிறார்கள். கற்பனை உதாரணங்களைக் கண்டபடி கொட்டியளக்கிறார்கள்.

✶

பிரிவினையென்ற பொழுது, இவர்கள் இப்படித்தான் பெருஞ்சத்தம் போடுவது வழக்கம். பிறகோ, பிரித்துக்கொள்ளும்பொழுது, தம்தம் பங்குக்காக, சண்டையிடும் பொழுதும் சத்தம் அதிகம்தான்!

கர்சான், வங்காளத்தை 1905-ல் இரண்டாகப் பிரித்தபொழுது, கூவினார்கள். பெருங் குரலெடுத்து எதிர்த்தார்கள்—1911-ல் பிரித்ததை இணைத்தனர் வெள்ளையர். ஆனால்

இன்று பாகிஸ்தானுக்குப் பிரித்துக் கொடுக்கும் பொழுது, அந்த ஜில்லா எங்களுக்கு, இந்த ஜில்லாவும் எங்களுக்குத்தான் என்று ஜில்லாவுக்கு சல்லடம் கட்டினார்கள்.

பர்மா பிரிக்கப்பட்டபோது என்ன செய்தார்கள்?

இலங்கை தனித்த பொழுது எப்படிச் சும்மாயிருந்தார்கள்?

பாகிஸ்தான் பிரிந்ததே, நம் நாட்களிலேயே, நம் கண்முன்னாலேயே, ஒப்பவில்லையா இந்த ஏக இந்தியாவின் தவப்புதல்வர்கள்!

சரித்திரம் காட்டும் சான்றுகளையும் மறைத்துவிட்டு, நமது கோரிக்கையை மறுப்பதற்காகச் சத்தமிடுகிறார்கள். அவர்கள் அறியாமைக்கு நமது அனுதாபம்.

பிரீட்மேன், சரித்திர வல்லுநர், உலக நாடுகளின் உரிமையுணர்ச்சியை அளந்து அழகாக குறிப்பிட்டுள்ளார்.

தனக்கென தனி நாடு அமைத்துக் கொள்ளும் வரை, உரிமையுணர்ச்சி ஓய்வெடுத்துக் கொள்வதில்லை. அடிமைப் படுத்தும் ஆணவ அதிகாரத்தை வெட்டி சாய்க்கும் வரை, அது ஓய்ந்திருப்பதில்லை என்கிறார் அவர்.

உரிமையுணர்ச்சியின் உண்மை நிலையை மிகத் தெளிவாக அவர் எடுத்துக் காட்டியுள்ளார்.

திராவிடத்தில் இன்று கிளம்பியுள்ள உணர்ச்சி அப்படிப்பட்டதுதான். 'திராவிடநாடு, திராவிடருக்காகும் வரை, ஓய்வில்லை.

அந்த உரிமை யுணர்ச்சித் தென்றலுக்கு, சரித்திர மலர் மணம் துணை செய்கிறது. ஆகவே, அந்தத் தென்றலில் மூழ்கிடும் திராவிடரின் எண்ணிக்கை தினந்தினம் பெருகுகிறது.


**முன்னேற்ற கவிதைகள்**

ஆசிரியர் : அடைக்கலம்

பாடியவர் : க. வெ. முருகேசன்

கழகப்பாடல்கள் கொண்ட

சிறந்தவெளியீடு

விலை அணா 0—2—0

கிடைக்குமிடம். **பதிப்பிரதர்ஸ்**

காஞ்சீபுரம்


உலகத்தில், ஒன்றின் பிடியிலிருந்து, விலகிச் செல்கிறேன் என்ற உணர்ச்சி ஏற்பட்டதே இல்லையென்று எவர்தான் கூறமுடியும். உலக வரலாறுணர்ந்தோர் அத்தகைய உளறுவாயர்களை என்னவென்று கருதுவர்.

அமெரிக்கா எவ்வளவு பணம் படைத்தது, பலம்பெற்றது—அங்குகூட நாற்பத்தெட்டு நாடுகள் தனித் தனியாக இருந்து கூட்டாட்சியில் தான் ஒன்றாக இருக்கின்றன.

அங்கு ஏக அமெரிக்கா என்று பேசவில்லை.

டாலரால், உலகையேதாலாட்டிக் கொண்டிருக்கும் அமெரிக்கா, அப்படி, தனிநாட்டுணர்ச்சியைத் தடுத்திட முடியாமல், கூட்டாட்சி நடத்தும்போது, வடநாட்டாதிக்க வீரர்கள், திராவிடம் பிரிந்து, தனி நாடாக இருப்பதை ஏற்க மறுக்கிறார்கள்.

தனி நாடு வேண்டும் என்ற எண்ணம் எங்கும் எப்பொழுதும் உள்ளது.

தென் ஆப்ரிக்காவிலுள்ள நெட்டாலின் நீண்ட நாள் எண்ணம் தனித்து வாழவேண்டும் என்பதுதான்—இதனையறிந்தும், தனிநாட்டுணர்ச்சியே தவறு என்று இன்னமும் தர்க்கம் செய்கிறார்களே சிலர்.

ஆஸ்திரேலிய காமன்வெல்த்திலிருந்து, வட ஆஸ்திரேலியா பிரிய முயற்சித்ததே—ஏன்? அம்முயற்சி முறியடிக்கப்பட்டிருக்கலாம். ஆனால், அந்த எண்ணம் எழுந்ததை எவர் மறுக்கமுடியும்.

இப்படி உலக நாடுகள் பலவற்றிலும் ஒவ்வொரு சமயம், ஒரு வல்லரசிற்கு அடிமைப்பட்டு, போராடி தன்நாடு, தன் இனம், தன்கலை, நாகரீகம் காப்பாற்றியதாக சான்றுகள் பலப்பல உண்டு.

★

ஒரு நாடு ஏற்படுவதற்கு ஒரு இனமக்களாக அங்கு வாழ்வோர் அமையவேண்டுமென்றால், நாம்ஒரு இனம், திராவிட இனம்.

ஒரு மொழி பேசுவதுதான் ஒரு நாட்டிற்குரிய இலட்சணம் என்றால் கூட, நாம் திராவிட மொழிகள் பேசுவோர். ஆனால், திராவிட மொழிகள் பலவாயினறே, அவற்றைப் பேசிக்கொண்டு எப்படி ஒரு நாடாக இருக்கமுடியும் என் கேட்கக்கூடும். அவர்களைக் கே சம் கண்திறந்து, ஸ்விட்ஸர் தைப் பார்க்கும்படிச் சொல்கிறே மூன்று, நான்கு மொழிகள் பே வோர் உள்ளனர் அங்கு — ஆ தனியொரு நாடாக இருக்கிறது

ஒரு மொழிகொண்டு, இந் உபகண்டத்தை, ஒரு நாடா முயற்சித்தனர். இந்தியை தே மொழியெனப பேசி, தெளி லாத முறையில் திட்டங்க கொண்டுவந்து, இங்கு தோற்றே விட்டனர். ஆனால் அவர்களு நினைவுபடுத்துகிறோம், ஒரு மொ பேசுவதாலேயே ஒரு நாடு என் ஒரு உபகண்டத்தைக் கூறிவி முடியாது. ஆங்கிலம் பேசும் ஆ லேயர், அமெரிக்கர், ஸ்பானியர் எல்லாம் ஏக இங்கிலாந்து என் வில்லை. தனித் தனி நாடுகளா தான் வாழ்கிறார்கள்.

ஓரே இடமாக இல்லாத நாடு கூட தனி நாடாக காட்சி தரு போது, மூன்று பக்கங்களில் லும், ஒரு பக்கம் மலையும் எல் யாகக் கொண்ட திராவிடம் மட் தனித்து வாழ முடியாது என்கி கள்.

மொழி, இனம், இடம் இவ களைப் போலவே, இன உறுதி பட்டுவிட்டால் எவரும் தடுத் நிறுத்த முடியாது.

அவர்களின் பழைய சரித்தி அவர்கள் பார்வையில் பட்டு அ களின் பண்டைநாள் படையெடு கள், வெற்றித் திருவிழாக்க கோட்டை கொத்தளங்கள், ம னர் மணிமுடி, செங்கோல் இவ கள் நினைவில் வந்து, அன்று மன் களாக இருந்தோம், இன்று ம பொம்மைகளாக மாறிவிட்டே என்று எண்ணிடும் நிலை பிறந் விட்டாலே, தன் நாட்டுணர் தானே பிறந்துவிடும்.

## தீர்ப்பு

தேர்தலில் நமது மாநிலத்தை பொறுத்தவரையில் காங்கிரசு ஆதரவாகவும், எதிரிடையாக கிடைத்த மொத்த வாக்குகள்:

| | |
|---|---|
| காங்கிரஸ் | — 66,77,5 |
| காங்கிரசுக்கு எதிராக | —126,65,1 |

பரம்பரையின் முன்னால் பெருமையும், இந்நாள் சிறுமையும் ஒப்பிட்டுப் பார்க்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டு விட்டால், நாட்டுணர்ச்சி ஏற்றெடுக்க ஆரம்பித்துவிடும்.

வடநாட்டிற்கும், தென்னாட்டிற்கும் பொதுவான சரித்திரம் உண்டா என்றால் இல்லை. இந்து தேச சரித்திரத்திலேயே, மிகவும் அலட்சியப்படுத்தப்படுவது, திராவிட நாட்டின் வரலாறுதான்.

வஞ்சகத்தால் தன் வாழ்வை வளர்த்துக்கொண்ட பனியாவிற்கும், அரசாண்ட பரம்பரையிலே வந்த திராவிடனுக்கும் எந்த வகையில் ஒற்றுமையிருக்கமுடியும்.

அவர்கள் வீரத்திற்கு பிருதிவிராஜனைப் போற்றினால், நாம் வடநாடு வரை படையெடுத்துச் சென்ற செங்குட்டுவனை நினைப்போம்.

விவேகத்திற்கு சாணக்கியர் என்பர் அவர்கள். நாம் வள்ளுவரை மறப்பதற்கில்லை.

ஆட்சிப் பெருமைக்கு அசோகனைக் காட்டுவர். நாம் கங்கை கொண்ட சோழனைக் காண் என்போம்.

நவரத்தினக் கவிஞர்களைப் பாருங்கள்—குப்தர்காலம் பொற்காலமாகத் திகழ்ந்ததற்கு காளிதாசரும், மற்றவர்களும் தான் காரணம் என்று அவர்கள் பூரிப்பர். நாம் சங்கப் புலவர்களின் பட்டியலை நீட்டுவோம்.

அவர்கள் சாகுந்தலம் பார் என்றால், நாம் சிலப்பதிகாரம் படி என்போம்.

அவர்கள் வேதம் ஓது என்றால், தமிழ்மறை இருக்கிறதே என்போம்.

அவர்கள் பத்தினித் தெய்வம் திரௌபதையென்பர். நாமோ, கண்ணகியைக் காட்டுவோம்.

அவர்கள், நம்முடன் எந்த வகையிலும் பொதுவான கருத்துடன் ஒற்றுமை கொண்டாட முடியாதே!

அவர்களுடன் திராவிடர்கள் எப்படி இணைந்திருக்கமுடியும்!

இரண்டு வேறுபட்ட இனத்தவர்கள் ஒரு நாட்டில் இருப்பதாலேயே ஒன்றாகிவிட முடியுமா—முடியாது. இதனை அவர்கள் நன்றாக உணர வேண்டும்.

மாகியர்கள், ஸ்லோவ்க்கள் பல ஆண்டுகள் பிரஞ்சு ஆட்சியிலிருந்தும், ஒன்றாகிவிடவில்லை. பகையும், எதிர்ப்பும் அவர்களிடம் நித்திய நிகழ்ச்சியாக இருந்துவந்தது.

பொஹிமியாவில், செக் மக்களும் ஜெர்மானிய மக்களும் ஒன்றாக இருந்தாலும், உள்ளம் ஒன்று கலந்து வாழவில்லை. எண்ணெயும், நீரும் போலத்தான் இருந்தனர்.

ஆகவேதான், பனியாவையும், பண்டைப் பெருமைமிக்க திராவிடரையும், ஒரு நாட்டில் வாழ்கிறார்கள் என்பதற்காகக்கூட அல்ல, இந்தியா ஒரு உபகண்டம் என்பது அவர்கள் செவிக்கும், சிந்தனைக்கும் எட்டாத ஒரே குற்றத்திற்காக—ஒன்றாக வைத்து உபத்திரவம் செய்கிறார்கள்.

வர்க்கத்திற்கொரு வட்டாரம், இனத்திற்கொரு இடம் வேண்டும் என்பதை பல சரித்திராசிரியர்கள் வலியுறுத்தியிருக்கிறார்கள். ரேனன் தரும் கருத்துக்களைக் கொண்டுதான், நம்மை நாம் பார்த்துக்கொள்கிறோம். இங்கு நம்மை நாமே உணர்ந்துகொள்ள முடிந்தது.

திராவிடநாட்டுப் பிரிவினையை சரித்திரங்கற்றோர் எதிர்க்க முடியவில்லை. பூகோளம் படித்தவர்கள் மறக்கமுடியவில்லை. ஆனால், இந்த இரண்டும் அறியாத சிலர், எகிறி குதிக்கிறார்கள். அவர்களைப் பற்றி யார் பொருட்படுத்துவார்கள்!

இன அரசுகள் ஏற்பட்ட விந்தைகளை வரலாறுகாட்டுகிறது. அதற்கு துணை செய்யும் பூகோள உண்மைகளை, நிலநூல் சொல்கிறது. அவைகளைப் படிப்பவர்களும், நம் நாட்டுடன் படித்தவைகளைப் பொருத்திப் பார்ப்பவர்களும் எதிர்த்தால் நாம் விடைகூறவேண்டும். ஆனால் ஏடு புரட்டாத சில கர்த்தபகுரலர்களுக்கு, நாம் எப்படிச் சொல்ல முடியும்!


வாங்கிவிட்டீர்களா?

A PLEA FOR Understanding

விலை அணு எட்டு

பரன்கார்ட் பப்ளிஷிங்ஹவுஸ், காஞ்சிபுரம்.


## வருந்துகிறோம்

உடுமலைப்பேட்டை நமது கழக முன்னணிவீரர்களில் ஒருவரான தோழர் M. S. கனகராசன் அவர்கள் 15—2—52 மாலை 4-மணிக்கு உயிர் துறந்தார் என்ற செய்திகேட்டுத்திடுக்கிட்டோம் மறைந்த நண்பர், தமது இளம்வயது முதல் நமது இலட்சியத்துக்காகப் பணியாற்றி வந்தவராகும். சுயமரியாதை இயக்கத்தின்மீது அளவிலாபற்று கொண்டு தமது 18-வது வயதிலேயே 'பகுத்தறிவு' எனும் நூலை எழுதி வெளியிட்டார். 'குடியரசு' இதழிலும், சீர்திருத்தக் கட்டுரைகள் தீட்டினர். தி. மு. க. தோன்றியநாள் முதல், அதன் வளர்ச்சியில் கண்ணுங் கருத்துமாய் இருந்ததோடு நமது சிவகெங்கை மாநாட்டையும் துவக்கி வைத்துப் பணியாற்றினர். அத்தகைய கழகவீரர், உடுமலை மக்களின் அன்புக்கடையாளமாக, நான்கு மாதங்களுக்கு முன்வரை, உடுமலை நகரசபைத் தலைவராகப் பணிபுரிந்து வந்தார். உடல்நலம் காரணமாக, தமது பதவியை, ராஜினுமா செய்துவிட்டு, சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவந்தார். அவரின் உடல்நலம் பெற்று வருவதாகச் செய்திகள் எட்டிக்கொண்டிருந்த நேரத்தில், அவர் இயற்கையெய்தினர், என்ற செய்தி அறிய நாம் திடுக்கிட்டோம். அவரது மரணம், உடுமலை மக்களுக்கோர் நஷ்டமாகும். அவரது பிரிவால் துயரப்படும் உடுமலை கழகத் தோழர்களுக்கும், தோழர் கனகராசன் அவர்களது குடும்பத்தாருக்கும் நமது மனமார்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

★

திராவிடநாடு

காஞ்சி] 24—2—52 [ஞாயிறு

# அநாகரீகம்

★

"உதவாதவன்!"

"ஒன்றுக்கும்பிரயோஜனமில்லை"

"சுயநலக்காரன்"

"நலன் நாடமாட்டான்"

"விரட்டுங்கள்!"

"அருகே இருப்பது ஆபத்து"

"கேட்டபேர்தான் ஏற்படும்"

இத்தகைய அடைமொழிகளால், அலங்கரிக்கப்பட்ட ஒருவனை, இழுத்துவந்து, ஊரார் முன்னிலையில்உட்காரவைத்து, 'கேளுங்கள்!—இவனே இனி உங்களுக்கு நாட்டாண்மைக்காரன். எடுங்கள் மாலையை; சூட்டுங்கள் இவனுக்கு,' என்று ஒரு பெரியவர், கூறினால் என்ன நினைப்பர் ஊரார்!

கள்ளச்சிந்தையும், குள்ள உள்ளமும், திறமையும் தகுதியுமில்லாதவனென்று, திட்டி விரட்டினோம் —தகாத செயல்கண்டு மூக்கையும் அறுத்தோம்! புண்கூட ஆறவில்லை—ஒழுகிய இரத்தமும் அடங்கவில்லை—அதற்குள் 'அரியாசனத்திலமர்த்துவேன்' என்கிறாரே, இந்தப் பெரியவர். இவருக்கென்ன, காமாலைக் கண்ணோ, கருத்துக் குருடோ, என்று தானே எண்ணுவர்!

வெறுத்து ஒதுக்கியவனுக்கு வெண்சாமரம் வீசச்சொல்வதும், 'என்னோடு பழகுகிறான். என் இஷ்டப்படி நடக்கிறான். எனக்கு வேண்டியவன். ஆகவே, அவன் சொற்படி நடவுங்கள்' என்று கட்டளை பிறப்பிப்பதையும், காட்டு ராஜாக்கள் காலத்தில் கூடக் கேள்விப்பட்டிரோம்! ஆனால், நமது 'ஆசியஜோதி' யின் சர்க்காரிலே, மூக்கறுபட்டது, 'முதல் ஸ்தானம்' பெறப்போகிறதாம்! ஊர் மக்களால் வெறுத்தொதுக்கப்பட்டது ஊராளப் போகிறதாம்!

பரத்தை பென்று ஊரார் தூற்றியவளைக் கைபிடித்து, 'சிங்காரி, ஒய்யாரி — நீயே என் பிரதம பியாரி!' என்று பாடுவது போல, பிரயோஜனப்படார் எமக்கு!' என்று தஞ்சைத் தரணி வெறுத்து வீசிய, மத்ய சர்க்கார் மந்திரி சந்தானம் அய்யங்காரை, பண்டித நேரு சர்க்கார், கவர்னர் ஆக்கியிருக்கிறார்கள். விந்திய பிரதேசத்துக்கு! சந்தானம் கவர்னர்!! எவ்வளவு விசித்திரமான செய்தி. இது. மக்கள் மன்றம் வெறுத்து வீசிற்று! சந்தானத்தை—'நான் மத்ய சர்க்காரின் மந்திரி' என்றார் தேர்தல் பிரச்சாரத்தின் போது. 'அதனால்தான் விரட்டினோம்' என்று தீர்ப்பளித்தனர், மக்கள். 'நேருவுக்கு நெருங்கிய நண்பன்' என்றார், வோட்டு கேட்டபோது. "அதனால் என்ன? நண்பனாகவே இரு! ஆனால் நாட்டு மக்களின் பிரதிநிதியாக வேண்டாம்!" என்று வாயால் அல்ல, தங்கள் வாக்குகள் மூலம, பதில் சொல்லினர்—மாயவரம் தொகுதி மக்கள். அவரை. கவர்னர், ஆக்கியிருக்கிறது நேரு சர்க்கார்!

மண்ணிலே வீசப்பட்ட கனி, மரத்திலே தொத்தியதை அறியோம் நாம்! குப்பையிலே வீசப்பட்டதை எடுத்து, குங்குமமிட்டு, போற்றமாட்டார் எவரும்! ஆனால், டில்லிசர்க்காரோ, தோற்றுப்போன ஒருவருக்குப் பதவி தருகிறது—அதுவும் அல்ப சொல்பமானதல்ல—ஒரு மாகாணத்துக்கே தலைவர் ஆக்குகிறது! மந்திரிசபைக்கும் சட்டசபைகளுக்கும் உயர்ந்த அந்தஸ்தில் உட்கார வைக்கிறது! ஒரு மாகாணத்தின் கவர்னர் ஆக்குகிறது!

தோல்வியுற்ற ஒருவரை 'துரைத்தனத்தில் இரு' என்று டில்லி பீடம் அமர்த்தவேண்டிய அவசியம் என்ன? விந்திய பிரதேசத்தார் விரும்பி அழைத்தனரோ, இவரை; 'வேறு ஒருவரும் கூடாது. சந்தானமே வேண்டும்' என்று வலியுறுத்தினரோ என்று துருவித் துருவிப் பார்த்தோம். ஒரு துணுக்குச் செய்தியும் கிடைக்கவில்லை — விந்தியப் பிரதேசம் 'வருக வருக' என்று வருந்தி அழைக்கவில்லை. இருந்தும் அழையா வீட்டுக்கு நுழையும் விருந்தாளி போல, இவர் திணிக்கப்படுகிறார். விந்திய பிரதேசத்து மக்கள் முன் கொண்டுபோய் நிறுத்தப்படுகிறார், தோல்வியுற்ற தோழர்.

இவரைக் கொண்டுபோய் அவ்வளவு அக்கரையுடன் அம்மாகாணத்து கவர்னராக ஆக்கவேண்டியது ஏனோ! என்ன பதில் காட்டுவர் தேசியத் திருவாளர்கள்? "எப்படி அவரை இழப்போம். எத்தகைய மேதை அவர். அவரையோ அரசியல் அஞ்ஞாத வாசம் செய்ய அனுமதிப்பது?" என்று செப்புவார், அல்லது 'கதியல்லால் வேறுண்டோ கனம் சந்தானத்தை விட்டால்!' என்று, கானம் எழுப்புவரா!

சர்க்கார் இயந்திரத்திலேயிருந்து பழுத்து உலவும் அரசியல் புலிகள் ஆயிரமாயிரம் உள்ளனரே—சந்தானத்தைவிட, தரமும், தகுதியும் உயர்ந்த நிலையில். அவருக்கேற்படாத இந்த வாய்ப்பு, மக்களால் வெறுத்து வீசப்பட்ட ஒரு நபருக்கு ஏன் அளிக்கப்படவேண்டும்! "நேருவின் நண்பர் — காங்கிரஸ் தியாகி" என்று காரணம் காட்டுவரென்றால், அதற்கு உரிய பதவி இதுதானா—நேருவுக்கு அந்தரங்க காரியதரிசியாக இருக்கட்டும்—ஆட்சேபிக்கவில்லை நாம்! காங்கிரஸ் கட்சிக்கு காரியதரிசியாக, மாதா மாதம் ரூ 5000 சம்பளத்தில் அமர்த்தப்படட்டும்—கவலையில்லை நமக்கு! நேரு சர்க்காருக்கு 'கவுரவ ஆலோசனையாளராக' டில்லியிலிருந்தே, யோசனைகள் கூறட்டும்—எதிர்ப்பார் எவரும் இரார்! இதை விட்டு விட்டு, அவரை, ஒரு மாகாணத்தின் – கவர்னராக்கவேண்டிய அவசரமும் அவசியம் எங்கே முளைத்தது? தேர்தல் முடிந்து ஒரு மாதமாகவில்லை—புது பார்லிமெண்டும் புது சர்க்காரும் நிறுவ இன்னும் ஒரே ஒரு மாதம் தானிருக்கிறது—இந்த நிலையில் இந்த நியமனம் எதற்கு?

மத்ய சர்க்கார் மந்திரி பதவி முடிந்ததும், காத்துக் கிடக்கிறதே 'கவர்னர்' பதவி! அவ்வளவு தூரம் சந்தானச் சக்கரம், சுழற்றப்படவேண்டிய சூழ்நிலை என்ன? கும்மிடித்திடலிலிருந்து கொள்கைகளைப் பரப்ப முடியாதவரா — தஞ்சைத் தரணியின் பஞ்ச நிவாரணத்துக்குப் பாடுபடக் கூடாதா—ஏழைகளாய் கோழைகளாய் திரியும் விவசாயிகளின் உயர்வுக்கு 'காங்கிரஸ் முத்திரை'யோடு தொண்டபுரிய வி...

டாதா, அவரை — உண்மையில், வரால் காங்கிரஸ் பலன் பெற்றி ருக்கிறது, அவரை அரசியல் அஞ் ாத வாசத்துக்கு அனுப்பக் டாது என்ற ஆசையிருந்தால்! வருக்குத்தர, 'கவர்னர்' தவி தானா கிடைத்தது? கவர்னர் தவி — இவர்கள் வகுத்திருக்கும் ட்டப்படி — சாதாரண அதிகார ள்ளதா, குறைந்த அந்தஸ்து டைத்ததா! கிடையாதே — ஒரு ாட்டின் 'ராஜா' போன்றதா ற்றே. அது! அதிலே கொண்டு பாய், 'தோற்ற சிங்கத்தை' அமர்த் க் காரணம்தான் என்ன?

பண்டித நேரு, ஜனநாயகத் தைப் பற்றிப் பேசக் கேட்டிருக்கி றோம் நாம். இந்தப் பொதுத் தேர் லே தாங்கள் நடத்த விரும்பியதே, ங்கட்கு ஜனநாயக முறையின் ாலுள்ள ஆசைதான், என்று பல லை பேசியிருக்கிறார்கள் காங்கி ஸ் மூலவர்கள். பல கோடி மக்கள் ாழும் இப்பரந்த 'பாரதத்தின்' னநாயக சின்னம், பண்டிதநேரு ன்று பேசப்பட்டது, இன்னும் ாற்றோடு போய்விடவில்லை. ஜன ாயகம் பேசப்படும் இவர்களா த்தகைய நடவடிக்கையில் ஈடுபடு து! சர்வாதிகார முத்திரை பொறிக்கப்பட்டிருந்தால் சுலபமா ப்பதில் கூறிவிடலாம், "அவர் சை — நாமென்ன சொல்வது?" ன்று. ஆனால், அப்படியில்லையே! க்களின் வோட்டுரிமையை மதிப் வர்களென்று அன்றோ தம்மைச் சொல்லிக் கொள்ளுகின்றனர்! இவர் ளா இப்படிச் செய்வது? தான் செய்த சேவைகளைச் சொல்லி— ான் சார்ந்திருக்கும் கட்சியால் ளைந்த நன்மைகளை எடுத்துக் ாட்டி தேர்தலிலே போட்டியிட் ார், தோழர் சந்தானம். அவரைத் தேர்ந்தெடுக்கவில்லை மக்கள். அவ ரைத் தங்களது பிரதிநிதியாகக் ருதவில்லை மக்கள் மன்றம். அவ து சேவையை ஒத்துக்கொள்ள வில்லை—அவர்மீது நம்பிக்கைவைக்க வில்லை—நல்லது செய்வார் என்று ண்ணவில்லை — அவருக்கெதிராக ன்றவரை நம்பினரே தவிர, 'மந் ரியாயிற்றே, மகாமேதையா யிற்றே' என்று கவலைப்படவில்லை— லட்சக்கணக்கான வோட்டர்கள். பிணிதீர்க்காத மருந்தும், ஏழ்மை போக்காத செல்வமும் போல, என்று புறக்கணித்து விட்டார்கள்! அத்தகைய சந்தானம், கவர்னர் ஆக்கப்படுகிறார் — போருக்குதவா வாள், போற்றப்படுகிறது! மக்கள் மனங்கவரா 'மதியூகி' மாகாண கவர் னராம்!!

சுதந்திரம்—மக்களுரிமை என்று வாயாரப் பேசுகிறார்கள் — காங்கிர சார். அந்த உரிமைகள் தந்த தீர்ப்பை, ஒதுக்கியிருக்கிறார்கள்.

ஜனநாயகத்திட்டத்தின் முக்கிய அம்சமே, மக்கள் விருப்பம் எவ் வழியோ அவ்வழியே அரசாங்கம் நடக்கவேண்டும் என்பதுதான். இரதகஜதுரகபதாதி படைத்த ராஜாதி ராஜனானாலும், மக்கள் தேர்ந் தெடுக்கவில்லையென்றால், அவன் சட்டசபைகளில் நுழையவும் முடி யாது — சட்டங்களை ஆக்கும் அமைச்சனாகவும் ஆகமுடியாது. ஆனால், ஜனநாயகம் பேசும் நேரு அரசாங்கமோ, அதையெல்லாம் விட மேலான 'கவர்னர்' பதவியைச் சூட்டுகிறது, 'தோல்வி வீரருக்கு' அவ்வளவு தூரம் சந்தானத்தின் மீது அக்கரையும், அதிசிரத்தை யும் ஏற்படுவானேன் — டில்லியா ருக்கு?

* * *

'தங்கச்சி! வீட்டிலே கூடாது என்று வீசியதை, விளக்குமாடத் திற்கேன் கொண்டுவந்தாய்?' என்று கேட்டாளாம், வீட்டிற்கு மூத்த வள், 'உதவாதது' என்று வெளியே எறிந்ததை எடுத்துவந்து வைத்த சின்னவளைப்பார்த்து. 'வீட்டிலிருக் கக் கூடாததா'—சின்னவள் கேட் டாளாம், 'ஆமாம்'—இது மூத்தவள்.

"யார் வீசியது வெளியில்?"

"நான்தான்!"

"நீங்கள்தானே வீசியது?" — மறுபடியும் அழுத்திக் கேட்டா ளாம் சின்னவள். 'ஆமாம் நான் தான்' என்று மூத்தவள் சொல்ல, 'அப்படியானால் நான் எடுத்துவந்து தான் வைப்பேன்!' என்று அகங் காரத்தோடு கூறினாளாம், இளைய யள்.

* * *

வீம்புக்காக வேண்டாததைச் செய்யும், சக்களத்திகள், கூடமல் லவே, சர்க்கார் என்பது மக்கள் 'வேண்டாம்' என்றால்,—மற்றொரு

வரை துரைமகனுக்குக் காட்டுவது தானா, கவுரவம்—ஜனநாயகம்—மரி யாதை! வீம்புக்காக மரியாதையை யுமா மண்ணிலே வீசவேண்டும்.

சந்தானத்தைத் தேர்ந்தெடுக்க வில்லை மக்கள். அவர், சர்க்காரிலே இருந்தவராயிருக்கலாம்—சர்க்காரை நடத்தும் நேருவின் சகாவாயிருக்க லாம்—ஆனால், மக்களால்வெறுத்து வீசப்பட்டவரன்றோ, அவர்! அவரை, அரசுபீடத்துக்கு அதிப ராக்குவதென்றால், 'அவர் கூடாது' என்று வாக்களித்த மக்களின் தீர்ப் புக்கு எங்கே மதிப்பு? ஜனநாயகப் பண்பாடும், தேசியத் திருவாளர் களைக் கேட்கிறோம் — செப்புவரா இதற்குப் பதில்! காட்டுவரா, கார ணம் 'கனம்' சந்தானம், கவர்ன ராக்கப்படுவதற்கு!

'வீம்புக்கு மாவு இடிச்சாள்' என்று சொல்வார்கள், கிராமப் புறங்களில். அதைப்போன்றன்றோ இருக்கிறது, அகில உலகும் புகழ் பரப்பி நிற்பதாகக்கூறப்படும் நேரு சர்க்காரின்போக்கு.

அதிகாரம் கையிலிருக்கிறது என்ற ஆணவம், ஹிட்லருக்கேற் படலாம்—முசோலினி இதயத்திலே அரும்பலாம்—ஆனால் நேருவுக்கோ, உண்டாவது! அதிலும் ஜனநாயகம் பேசும் நேருவுக்கா?

## நமது அனுதாபம்

நமது அலுவலகத் தோழரும் கழகச் செயல் வீரருமான தோழர் ஆர். கே. மூர்த்தியின் அருமைத் தாயார் திருமதி பாப்பாத்தி அம்மை யார் அவர்கள் கடந்த 14ந் தேதி சென்னையில் காலமானார் என்ற செய்தியை வருத்தத்தோடு தெரி வித்துக் கொள்ளுகிறோம்.

விளக்கு அணைந்த குடும்பம் போல, துயரத்துக்காளான, அம்மை யார் அவர்களின் கணவர் திரு. ரத்னசபாபதியார் அவர்களுக்கும், தாயை இழந்த துக்கத்தால் தவித்து நிற்கும் நமது நண்பருக்கும், அவ ரது சகோதரர்களுக்கும், 'திராவிட நாடு' அலுவலகத் தோழர்கள், தங் களது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறார்கள்.

'டில்லி'யின் இந்த நடவடிக்கை, தங்களுக்கு வேண்டியோருக்கான சகலவசதிகளையும் பெறும் சாதனமே, சர்க்காரிலிருப்பது என்று காங்கிரஸ் மூலவர்கள் கருதுகிறார்கள் என்று பாவிக்கிடக்கும் செய்தியை பலப்படுத்துகிறது.

மக்கள் தீர்ப்பை உதாசீனம் செய்து 'மனதிற்கிசைந்தவன் இவன்! மகாபீடத்திலமர்த்துவேன் நானே' என்று, நடவடிக்கை எடுக்கும், இந்தக் கேலிக்கூத்தை எங்கே காண முடியும்—இங்கு தவிர.

ஜனநாயகம் — பொது வாழ்வு முறை — ஆகியவைகளைப் பாிக்கிக்கும், இச்செயலை நல்லோர் கண்டிக்காமல் விடக்கூடாது. 'மக்களின் தீர்ப்பு — மகத்தானது' என்பது நிலைநாட்டப்படுவதுதான், அரசியல் நீதிக்கு, ஆணிவேர். இந்த அச்சாணி கழலும்படி அனுமதித்தால், ஆதிக்கவெறி, தலைதூக்கிக்கிளம்பும் —சர்வாதிகாரக் குரல், எழும்பத் துவங்கும். பொதுவாழ்வில், கண்ணியம் மலரவேண்டுமேயானால், வீம்புக்காக வீணனபாதை புகுதல், கண்டிக்கப்பட வேண்டும். மக்களால் வெறுக்கப்பட்டோர், மறுபடியும் மக்கள் நன்மதிப்பைப் பெறும் வகையில் பணியாற்றி, மதிப்பைப் பெறமுயன்றால்தான்—அரசியல் வாழ்வு, இடியில்லா வானமாக விளங்கும். 'அதிகாரமிருக்கிறது—ஆகவே தோற்றாலும் உன்னை துரைத்தனம் நடாத்தச் செய்கிறேன்' என்று, வீம்புபேசி, மக்கள் தீர்ப்பை, அவமதிக்கத் துவங்கினால் —அங்கே உரிமை, கேலிச்சொல்லாகும்! மனித நாகரீகம்—மண்தூசு ஆகும்! சர்வாதிகாரம் மலரும் — அரசியல் கண்ணியம் அழுக்குக் குட்டையில் வீழும். ஆகவே, 'டில்லி'யின், இதுபோன்ற கேவலமான நடவடிக்கைகளை, நாட்டு நலனில், அக்கரை காட்டுவோர், அனுமதிக்கக்கூடாது. மக்கள் தீர்ப்புக்கு மதிப்பில்லையென்றால், அம்மதோன்மத்த நிலை பிறக்கத் துவங்கியிருக்கிறதென்றால், அரசியலிலே அநாகரீகம் புகத்துவங்குகிறது— என்றே பொருள். இந்த அநாகரீகம் புகாது தடுக்கப்படவேண்டும் நாட்டின் கண்டனக்குரலால்.

# ஆசை, நிறைவேறினால்!

அண்ணல்

[சென்னையிலே கடந்த 18—2—52 அன்று நடைபெற்ற காங்கிரஸ் ஊழியர்கள் கூட்டத்தில் தோழர் டி. செங்கல்வராயன் ஒருயோசனை கூறினாராம். காங்கிரஸ் ஊழியர்களுக்கு பொது மக்களிடம் பழக பயிற்சி உண்டாக்கவேண்டுமென்றும் அதற்கான கல்லூரியைத் திறக்க தாமே முன்வருவதாகவும், தெரிவித்தாராம். அந்தக் கல்லூரி திறக்கப்பட்டால்......]

## ஒரு விஞ்ஞாபனம்

இதனால் சகலமான பொது ஜனங்களுக்கும் விசேஷமாக காங்கிரஸ் கக்ஷியைச் சேர்ந்தோருக்கும் தெரிவிப்பதென்னவென்றால் நாளது......தேதியில் காங்கிரஸ் ஊழியர் பயிற்சிக் கல்லூரி திறக்கப்படும். ஸ்ரீமான் 'கனம்......... அவர்கள் ஆரம்பித்து வைப்பார்கள். சேர விரும்புவோர்......... அணா தபால் ஸ்டாம்புகளுடன் எழுதவும்.

இப்படிக்கு,
T. செங்கல்வராயன் M. C.
(அதாவது கார்ப்பரேஷன் கவுன்சிலர்)
தேனாம்பேட்டை தோப்பு
சென்னை

[N. B:- ஏராளமான பேர் சேரப் போவதாக லெட்டர்கள் வந்துள்ளன. ஆகவே, இடத்துக்கு முந்துங்கள். அரிய சந்தர்ப்பம். இது சமயம் தவறினால் மறு சமயம் வாய்க்காது T. செ]

[சில நாட்களுக்கெல்லாம், ஒரு நாள் பத்திரிகைகளிலே, ஆறுகல அளவில், பிரமாதமான தலைப்புகளிட்டு, இப்படி செய்திகள்வரலாம்]

ஆரம்பம்! ஆரம்பம்! ஆரம்பம்!!!

ஊழியர் பயிற்சிக் கல்லூரி

ஆரம்பவைபவம்

பத்துலட்சம் ரூபாய் நிதி சேரும்

★

[ஏதோ ஒரு ஊர் — இரண்டு காங்கிரஸ் ஊழியர்கள் சந்திக்கின்றனர்]

"நமஸ்காரம் அண்ணாச்சி!"

"ஜெய்ஹிந்த்"

"ஊழியர் காலேஜ், ஆரம்பிச்சாச் சாமே!"

"பார்த்தேன் பத்திரிகையிலே"

"நீங்க புறப்படலையோ? நம்ம ஊர் தலைவர் கேட்டுட்டு வாச் சொன்னாரு"

"யாரு—மு. கோ. ரா. வா?"

"ஆமாம்—போறவர்ற செலவெல்லாம் காங்கிரஸ் கமிட்டி தருமாம்!"

"ஊஹூம்......அவரு போறாரா?"

"யாரு—மு. கோ. ரா. வா?"

"ஆமாம்!"

"அவரு எப்படி அண்ணாச்சி போகமுடியும்? கடை, மில்லு கழனி இதையெல்லாம் கவனிக்கவேணும்—குடும்பமும் பெரி இல்லே!"

"அது தெரியும்பா—நம்மையெல்லாம் போகச் சொல்றாரே, நமக்கு மட்டும் குடும்பம், வயிறு, இல்லியோ! அவன் வீட்டிலேன்னா கொட்டிகிடக்குது, 'பிளாக்மார்கெட்' பணம்—நம்மைச்சொல்லு—முப்பது வருஷமா உழைக்கிறே —செப்பாலடிச்ச ஒரு காசு வாங் அறியான் இந்த கந்தசாமி!"

"என்னாங்க அண்ணாச்சி! நீங்களே இப்படிப் பேசினா......"

"பின்னே என்னய்யா! காங்கிர ஸ்தாபனத்திலே, கருத்து தெரி நாள் முதல், நான் ஊழியனாயிரு கேன் — இந்தப்பாரு — இந்த தழும்பு 'உப்புச் சத்யாக்ரகம்-இ 'கள்ளுக்கடை மறியல்' இ 'ஆகஸ்டு'. இந்த மு. கோ. ரா. கிரஸிலே எப்பப்பா சேர்ந்தான்?

"போன வருசம்தான்!"

"சொல்றீயே — வெட்கமில்லே! அதுக்குள்ளே, அவுரு, பெரியமனுஷரு ஆய்ட்டாரு. தலைவர் ஆயிட்டாரு - உண்மையாச் சொல்றேன்— பொதுஜன சேவை செய்றது எப்படின்னு கத்துக்கவேண்டியது நாமல்ல—இந்த 'புதுசுகள்,தான்— தெரியுமோ?"

★

[தேனாம் பேட்டை தோப்பில், ஒருபக்கம் பத்துப்பனிரெண்டுபேர் கூடி நிற்கிறார்கள். காலை மணி 10]

"என்ன, தஞ்சாவூர் அண்ணாச்சி! 'சிமெண்ட் பெர்மிட்'டுக் கப்புறம் வர்றதேயில்லையே......"

"எங்கேங்கே முடியுது? நம்ப முதலியார் விடறாரா — காலையிலே எழுந்து அவுரு வீட்டுக்குப் போனா எப்ப திரும்புவேன்னு எனக்கே தெரியாது"

"என்ன வேலை அப்படி — கிராமம் கிராமமா போய் காங்கிரஸ் ஸ்தாபனங்களை......"

"ஊம்...நீங்களொண்ணு! ஊர் வம்புதான். பிள்ளை எப்படியிருக்காரு சிங்காரம்—அவர் காதுக் கடுக்கன் அசல் வைரந்தானா சிங்காரம் — வேதாரண்யம் போயிருந்தியா சிங்காரம் — உப்பு வியாபாரம் பலந்தானா சிங்காரம்...இப்படி கேட்பாரு என்னை — இதுக்கெல்லாம் பதில் சொல்லணும்"

"முதலியாருதானே, தாலுகா கமிட்டித் தலைவரு!"

"ஆமாம்! ஆமாம்!!"

இந்த நேரத்தில் 'வந்துவிட்டார்,! என்ற குரல் கேட்டு, அங்கே கூடியிருந்தோர் அனைவரும் கிளம்புகிறார்கள். தனித் தனியாகக் கூடிப் பேசிக்கிடந்த எல்லோரும் எழுந்து போகிறார்கள். காரிலிருந்து இறங்கிய வண்ணம், வேகமாக வருகிறார், 'பேராசிரியர்' ஸ்டைலில் தோழர் செங்கல்வராயன். வகுப்பு, ஆரம்பமாகிறது. 'அட்டெண்டன்ஸ்' எடுக்கிறார்.

செ:- சுவாமிநாதன் செட்டியார்.

ஊ:- ஆஜர், சார்!

செங்:- என்னங்க செட்டியார், இதுபோலச் சொன்னால், எப்படி தேசிய பக்தி வளரும். 'ஆஜர் சார்!' கூடாதுங்க...'ஜெய், ஹிந்த்'—அப்படீன்னு, சொல்லணும்......

[இதைக் கேட்டதும், ஊழியர்கள்—அல்ல! அல்ல!! —மாணவர்களிடத்திலே சல சலப்பு உண்டாகிறது.]

செங்:- என்ன; சப்தம்?

ஊழி:- ஒண்ணுமில்லே, சார்! வந்து...

செங்:- 'சார்!' போடாதீங்க... 'ஆச்சார்யா' — அப்படீன்னு, அழைங்க.

ஊழி:- ஆச்சார்யா! ஒரு சந்தேகம்.

செங்:- கேளுங்கள் — சந்தேக நிவர்த்திதான் அறிவை வளர்க்கும். உங்கள் மனசுலே எந்தச் சந்தேகம் வந்தாலும், தயங்காமே கேளுங்க.

ஊழி 1:- 'ஜெய் ஹிந்த்' சொல்லணும்னு சொன்னீங்களே! 'வந்தே மாதரம்' சொன்னா, என்னங்க!

ஊழி 2:- எனக்கும் அதுதான் ஆச்சார்யா! வந்தே மாதரம் அல்லது 'போலோ பாரத் மாதாகி ஜே!' சொல்லக் கூடாதுங்களா!

ஊழி 3:- ஏங்க! காலேஜிலே யெல்லாம் 'பிரசண்ட், சார்' என்பார்களாமே!!

ஊழி 4:- 'உள்ளேன், ஐயா!'ன்னு சொன்னா நல்லாயிருக்காது?

[பேராசிரியர் அவர்கள் முகம் விகாரமடைகிறது. 'கைகுட்டை'யை எடுத்து முகத்தைத் துடைக்கிறார்.]

ஊழியரில் ஒருவர்:- ஏங்க! அது கதர்தானா அல்லது......?

[கோபமடைகிறார், பேராசிரியர். கையிலே இருக்கும் புத்தகத்தைமேஜையின் மேல் அடிக்கிறார்.]

செங்:- உ......ஸ்! அப்பப்பா! சின்ன விஷயத்தைப் பெரிசு படுத்துறீங்களே. ஒரு சாதாரண விஷயத்திலே கூட கட்டுப்பாடு இல்லேன்னா எப்படி? நாம்ப முதலிலே கத்துக்க வேண்டியதுகட்டுப்பாடுதான். பிறத்தியாரைப்பாருங்க! அதைக் கண்டாவது நமக்குப் புத்தி வரவாணும். இப்ப, சமீபத்திலே, 'எலெக்ஷன்' நடந்ததே........

ஊழி:- ஆமாம், ஆச்சார்யா! எங்க ஊர் தலைவர், அதைத்தான் கவனமா கேட்டுட்டு வரச் சொன்னாரு—கொஞ்சம் கோபிச்சுக்காமெ, விளக்கிறீங்களா?

செ:- ஓ! என் தொண்டு பணி செய்வதுதான்—இப்படிக் கேளுங்க கேள்வி—பதில் சொல்லக் காத்துக் கிடக்கிறேன்...

ஊழி:- அடுத்தபடி, ஜில்லா போர்டு தேர்தல் வரப்போகுதில்லே—நம்ப எப்படீங்க, வேலை செய்யறது?

செ:- முதலிலே, ஒரு ஆளை, தேர்தலுக்கு நிற்க மேலிடம் நியமிக்கிறது. அதை, நாம்ப எல்லாம், உடனே ஒத்துக்கணும். நமக்குள்ளே எவ்வளவு வித்யாசம், கசப்பு இருந்தாலும் 'காங்கிரஸ் மகா சபைக்காக, மறந்துடணும். பிறகு, நம்ப கொள்கையைப்பற்றி மகா ஜனங்களிடத்திலே போய் கூட்டம் போட்டு பேசணும்...... வீடு வீடாப்போய் சொல்லணும்... எதிர் கட்சிக்காரன்களுக்கு சுடச் சுடப் பதில் சொல்லணும்...நம்ப கக்ஷி ஜெயம் பெறணும்னு வெறியோடெ வேலை செய்யணும்...... இதையெல்லாம் செய்றதுக்கு முந்தி யாரை நீங்க உங்கத் தொகுதிக்கு நிறுத்தணும்னு நினைக்கிறீங்களோ, அந்த ஆளுடைய யோக்கியதாம்சம், தியாக புத்தி, படிப்பு, இதையெல்லாம் பார்த்துத்தான், நீங்க மேலிடத்துக்கு சிபார்சு செய்யணும்......"

[தேர்தலில் வேலை செய்வதெப்படிஎன்பதைபோராசிரியர் 'மாணவர்களுக்கு' விளக்கிக்கொண்டிருக்கிறார் — ஆர்வத்தோடு. அப்போது ஒருமூலையில் இருவர்.]

ஊழி:- ஏம்பா! சோணைமுத்து— இவுரு தேர்தலிலே வெற்றி பெறுவதெப்படி என்பதை வர்ணிக்கிறாரே. இவரு இப்ப நடந்த தேர்தலிலே நின்னாரு இல்லே!

சோணை:- ஆமாம் பார்லிமெண்டுக்கு நின்னாரு.

ஊழி:- ஜெயிக்கலீல்லே!

சோணை:- ஊ...ஹூ...ம்

[இருவரும் வாய்விட்டுச் சிரிக்கிறார்கள். பேராசிரியர், தன்பிரசங்கத்தை, நிறுத்

துகிருர்—கோபத்தோடு கேட்கிருர்.]

செ:. ஏன், சிரிச்சீங்க?

சோ:- ஒண்ணுமில்லீங்க! நீங்க தேர்தலிலே ஏன் தோற்றீங்கன்னு, அண்ணுச்சி, கேட்கிருரு......

[பத்துப் பனிரெண்டுபேரும், ஏகசமயத்தில் சிரிக்கிருர்கள். பேராசிரியர், முகம் எள்ளும் கொள்ளும் வெடிப்பதுபோல ஆகிறது. 'என்ன செய்வார் பாபம்?' கோபத்தோடு வகுப்பறையை விட்டு வெளியேறுகிருர். அப்போது பக்கத்திலே இருக்கும் காங்கிரஸ் கட்சி ஆபீசிலே, ஒரே கூச்சல் போடுவதுகாதில் விழவே, அந்தப்பக்கம் போகிருர்.]

[காங்கிரஸ் கட்சி ஆபீஸ். காமராஜ் உட்கார்ந்திருக்கிருர். அவரைச் சுற்றி, கோவை சுப்பையா, டாக்டர் வரதராஜுலு நாயுடு, வேதாரண்யம் வேதரத்தினம், எம்.ஆர். வெங்கட்டராமன், மாயவரம் நாராயணசாமி நாயுடு, அண்ணுமலைப் பிள்ளை, சிவஞானகிராமணி முதலிய பலர். செங்கல் வராயன் நுழைகிருர்.]

காமராஜ்:- என்மேலே இப்படி ஏன் சீறுராரு — சுப்பையா. எதையும் ஆய்ந்தோய்ந்து பேசணும் கிறேன்........

சுப்பை:- சும்மா, இரு ஐபா! எல்லாருக்கும் அறிவு இருக்கு. ரொம்பத்தெரிஞ்சவர்னு நினைச்சு எதையும் உளருதிர்!

காமராஜ்:- நாக்கு நீளுது—

சிவஞானம்:- இப்படி இரண்டு பேரும், சண்டை போட்டா காரியம் எப்படி நடப்பது. சிங்களத்திலே சித்திரவதைப் படுகிருன் தமிழன் — பர்மாவிலே டதைக்கிருன் — மலேயாவிலே மாணமடைகிருன். இந்த நேரத்திலே, கேவலம், எக்சிபிஷனுக்காக, ஏன் இப்படி சண்டை போடனும்—மண்டையுடையணும் — அண்டையில் நிற்போர் சிரிப்பரே!

சுப்பை:- சும்மா, இருய்யா! நீவேறே—மொட்டைத்தாதன் குட்டையிலே விழுந்தான்னு........ வேதாரண்யம் அண்ணுச்சியைக் கேட்கிறேன். நீங்களும்தான் அஞ்சாறு வருசமா, கஸ்தூரிபா பள்ளிக்கூடம் நடத்தறீங்க......இப்படியா நடக்குது! கணக்கு கேட்டா காமராஜ் ஏன் பாயணும்? ஏங்கிறேன்......

மாயவரம் நாராயணசாமி:— அவரைப்போய்க் கேளுங்கோ — அவர் விஷயம்தான் சிரிப்பா........

வேதரத்னம்:- நம்மை இமுக்காதீர்கள்! நாமுண்டு—காந்தீயத் திட்டமுண்டு—மகாத்மாஜீ! மகாத்மாஜீ!!

[சிரிப்புச் சப்தம் கேட்டு, திரும்புகிருர், செங்கல்வராயன். வகுப்புமுடிந்ததால், வந்த ஊழியர்களெல்லாம், வாயிலில் கூடிக்கிடக் கிருர்கள் — இந்தக் கூத்தைப்பார்த்த வண்ணம். வெட்கம் பாவுகிறது. அங்கிருந்து புறப்படுகிருர் — காரை நோக்கி. இரு ஊழியர்கள் பேசிக் கொள்ளுகிருர்கள்.]

ஊழி:- ஏம்பா! ஐயாவே — தலைவர்கள் பயிற்சி காலேஜ்—வைக்கச் சொல்வோமா........

ஊழி:- ஆமாம்! ஆமாம்!! அதைத்தான் முதலிலே செய்யச் சொல்லணும்..........

[காதிலே வாங்காததுபோல, வேக வேகமாக, நடையைக் கட்டுகிருர்—தோழர் செங்கல்வராயன். அவருடைய பையிலிருந்து, ஒரு காகிதம் கீழே விழுகிறது—அதில் "கார்ப்பரேஷன்கூட்டம் — கூவம் நதியைச் சீர்திருத்துவதுபற்றி விவாதிக்கப்படும்" என்று எழுதப்பட்டிருப்பது தெரிகிறது.]

★

# இத்தாலியில் இந்[தி]

தங்களது மொழி இந்தி—அ[...]
எங்கும் தலைநிமிர்ந்து வாழச்செ[...]
யவேண்டும் என்கிற ஆசை, வ[...]
நாட்டினருக்குத் தீவிரமாக இருந்[து]
வருகிறது. இதை விளக்கும் தகவ[ல்]
ஒன்று அண்மையில் பத்திரி[கை]
களில் வெளிவந்திருக்கிறது.
"இந்தி மொழியைக் கற்று[க்]
கொள்ளும் மாணவர்களில் ய[ார்]
முதன்மையாகவும் இரண்டாவத[ா]
கவும் இருக்கிருர்களோ அவ[ர்]
களுக்கு ரூ. 500-ம் ரூ. 250-[ம்]
மதிப்புள்ள இரண்டு பரிசுகளை
முறையே அளிப்பதென இந்தி[ய]
சர்க்காரின் கல்விமந்திரி இலா[கா]
முடிவு" செய்திருகிறதாம்! அதுவு[ம்]
எங்கே? ரோமாபுரி பல்கலைக்கழக[த்]
தில்! இங்கல்ல; இத்தாலியில்!!
இத்தாலியில் இந்தி பரவவேண்[டு]
மாம்—அங்குள்ளோர் அதன் பெ[ரு]
மையை அறிய வேண்டுமாம். டில்[லி]
பீடத்தின் ஆசையைப் பாருங்கள்[!]
மக்களின் வரிப்பணத்தால் தங்க[ள்]
மொழிக்குப் புகழ் தேடுகிருர்கள்.
ஆனுல், இங்கிருக்கும் நம்[...]
வரோ! தமிழ் மொழியின் சிறப்[பு]
குறித்து சிந்திக்கவும் முற்பட[வ]
தில்லை. வரித்தொகையில், சிறி[து]
கூட, இங்குள்ளோருக்காக செ[...]
வழிக்க முன்வருவதில்லை. 'அய[...]
ரும், நம் மொழியின் அருமைக[ளை]
அறியச் செய்வோம்' என்[...]
ஆசை, தமிழகத்து மந்திரிம[ார்]
களுக்கு அரும்புவதில்லை.
நாமும் வரிகட்டத்தான் செ[ய்]
கிறோம். அதைவைத்து தம[து]
மொழியைத் திக்கெட்டும் பரப்[ப]
எண்ணுகிருர்கள், வடநாட்டா[ர்]
அதுவும் ரோமாபுரியிலே இந்தி[க்]
குப் பரிசு தரப்படுமாம்!
ரோம் — சீரழியுமுன்பு, இ[ன்]
றைக்கு 2000 ஆண்டுகளுக்[கு]
முன்னதாகவே, அதன் கடைவீ[தி]
களிலே வழங்கப்பட்ட நம[து]
மொழி இன்று தாயினும் கேட[ாய்]
நலிகிறது அதைப் பற்றிப்பே[சச்]
சொல்ல, எவரும் இல்லை!!
இந்திய உபகண்டத்திலேயே
தொன்மைவாய்ந்தது தமிழ். ஆன[ால்]
அது தவிக்கிறது! சில நூற்றாண்[டு]
களுக்குமுன் முளைத்த "இந்[தி]
பரப்பப்படுகிறது—"பரிசு உண்[டு]
படியுங்கள்" என்று அந்நிய[ரி]
ஆவலைத் தூண்டி விடப்படுகிறது!

# நமது 'கதை'

சாம்ராஜ்யங்கள் பல சரிந்தன—முடிகள் முறிந்தன — கொடிகள் மாறின—கொற்றவர் பலர் வீழ்ந்தனர்—புதுமக்கள் புகுந்தனர்—கலை மாறிற்று! வாழ்வியல் மாறிற்று! தென்றல்சோலையிலேபுயலும், புயல் வீசிய பாலையில் தென்றலும் எழும்பிற்று! பல இனமக்கள் புலம் பெயர்ந்து, பழங்குடி மக்களைப் போரில் வென்று குடியேறினர்! புதுப்புது நாகரீகங்கள்! புதுப்புது அரசுகள்!

'உலக வரலாறு' காணப் புகுந்தால், நமக்குக்கிடைக்கும் செய்திகள் பலவாகும். மனித உலகிலே ஏற்பட்ட நெளிவுகள், மனதை வளைக்கும். மோதிக்கொண்ட நாகரீகங்களின் நிலை அறிந்து, உள்ளம் வியப்போம். பாபிலோன் பரணி பாடியிருந்த காலமும், ஏதன்ஸ் இறுமாந்துகிடந்த நிலையும், எகிப்து சிங்காரச் சிந்து பாடிக்கிடந்த நேரமும், ரோமாபுரிக் குதிரைகளின் குளம்படிபட்ட இடங்களும், அவற்றோடு நமது மக்கள் போட்டியிட்டு சிறப்புற்று ஒளி வீசிய நாட்களும் நம் சிந்தையைக் கவரும்!

வாழ்விழந்து வதைப்பட்டுக்கிடக்கும் சமுதாயத்தினராகிய நாம் 'உலக வரலாறு' நோக்கிச் சென்றால், புது உணர்வு பெறுவோம். சேரன் சிறப்பும், சோழன் பெருமையும், பாண்டியன் முரசமும், பத்துப் பாட்டும், எட்டுத்தொகையும், உணர்ச்சியிழந்து கிடக்கும் நம் உள்ளங்களைத் தட்டி எழுப்பும்!

உலகத்தில், நமது தாயகம் சுடர்விட்டுப் பிரகாசித்தகாலம் ஒன்றுண்டு. நாவாய்கள், பரந்துவிரிந்தோடிய காட்சிகளைக் கண்டிருக்கிறார்கள் நமது மூதாதையர். இத்தகைய பழம் பெருமைகளை, உலக இனங்களின் வாழ்க்கை வரலாறுகளோடு ஒப்பவைத்து, விளக்கும் அரியநூல் ஒன்று, யாழ்ப்பாணம், சைவப்பிரகாச யந்திரசாலை மூலம் பிரசுரமாயிருக்கிறது. "உலக வரலாறு" எனும் சிறப்புறு நூலை சிந்தனை உலகுக்கு தந்திருப்பவர் யாழ்ப்பாணம் பருத்தித்துறை புலோலி இந்துக்கல்லூரித் தலைவர் திரு இராமநாதப்பிள்ளை B.A. அவர்களாகும். தமிழில், இதுபோன்ற நூல்கள் குறைவு. இந்த நல் முயற்சியில் கண்ணோட்டம் செலுத்திய அன்னாரை மனமுவந்து வாழ்த்துகிறோம். சிறப்புமிக்க அந்நூலில், நமது பண்டைப் பெருமைபற்றி ஆராய்ந்து அவர் தந்திருக்கும், சில பகுதிகளை, நம்மனோருக்குப் படைக்கிறோம்:-

நீண்ட தலையினையும் நீண்ட மூக்கினையும் செம்மயிரினையும் மங்கிய விழியினையும் உடைய ஆரியக் கூட்டத்தினரைப்போன்றவரல்லர் தமிழர்; தமிழர் கருமயிரும் கருவிழியும் நெடுங்கண்ணும் செவ்வாயும் உடைய திராவிடக்குழுவினர், தமிழ் நாடும் தமிழ்மொழியும் மிகப் பழையவை என்பது தமிழிலக்கியவாராய்ச்சிகளாற் புலப்படும். தமிழ் வேந்தர் ஆணை 2000 ஆண்டுகட்கு முன் குமரிதொட்டு இமயம் ஈறுகச் சென்றதென,

"தென்குமரி வடபெருங்கற்
குணகுட கடலா வெல்லை"

என்னும் மதுரைக்காஞ்சியடிகளாலும்,

"வடாஅது பனிபடு நெடுவரை
வடக்கும் தென்ஆஅ துருகெழு
குமரியின் தெற்கும் குணாஅது
கரைபொரு தொடுகடற்
குணக்கும் குடாஅது தொன்று
முதிர் பௌவத்தின் குடக்கும்"

என்னும் புறப்பாட்டடிகளாலும் தெளிவாகின்றது.

ஆதிகாலந்தொட்டுத் தமிழர் குமரிக்கண்டத்திலும் நாகத்தீவிலும் வாழ்ந்தனர். நாகத்தீவு ஈழத்தின் வடபாலுள்ள யாழ்பாணத்தைச் சுட்டும் என்பது பருத்தித்துறையின் அண்மையிலிருக்கும் திருமால் கோயிலின் புறத்தே 1938-ல் அகழ்ந்து எடுக்கப்பட்ட பொற்ற கட்டினாற் கருதப்படும். அத் தகட்டைத் தன்னகத்தே பெற்ற பௌத்தகோயில், நாகத்தீவின் அரசனும் வாகாயாகன் (வாசபன்) என்பவனுடைய அமைச்சன் இசைக்கிரியன் என்பவனால் கட்டப்பட்டதென அத்தகட்டில் எழுதப்பட்டுள்ளது. வசாயாகன் (வசபன்) கி. பி முதல் நூற்றாண்டில் இலங்கையில் ஆண்ட அரசன் என்பது மகாவம்ச நூலால் தெரிகிறது.

தமிழ்க் குடிகள் வங்கத்திலுள்ள 'தமிழுக்' என்னும் ஊரிலும் இராசமகாலிலும் நாகபுரத்திலும் சிந்துப் பிரதேசத்திலும் பாஞ்சாலையிலும் பலுச்சிஸ்தானத்திலும் குடியேறியிருந்தனர்.

மோகஞ்சோதாரோவையும் அதற்கு 400 மைல் அப்பாலுள்ள அரப்பாவையும் அகழ்ந்துபார்த்த ஆராய்ச்சி வல்லுநர் ஆண்டுச் சில சின்னங்களும் சித்திர எழுத்துக்களும் காணப்படுவனவாகையால் ஆங்கிருந்தோர் தமிழராவர் என மொழிகின்றனர். மேற்கூறிய இரு நகரங்களிலும் சுட்டசெங்கற்களால் பல அடுக்குடைய வீடுகள் கட்டப்பட்டிருந்தன எனவும், அந்நகரத்து வீடுகள் மிக அகன்றவையெனவும், அவ்வீதிகளுக்குக்கீழ் அழுக்குநீரும் மழைவெள்ளமும் போகும் குழாய் வாய்க்கால்கள் (சலதாரைகள்) அமைக்கப்பட்டிருந்தனயெனவும், நகர மக்கள் பொன்னுபரணங்கள் அணிந்தோரெனவும், கி. மு. 2800க்கு முன்னரே அம்மக்கள் மிகவும் சீர்திருந்திருந்தனரெனவும், அந்நகரங்களை அகழ்ந்து பார்த்தபண்டைப்பொருளாராய்ச்சி வல்லோராகிய மார்ஷல் மக்கே முதலியோர் துணிகின்றனர். அந்நகரங்களில் இலிங்கங்கள் செப்புக் கருவிகள் பொன்னுபரணங்கள் யானைத்தந்தச் சீப்புகள் மயிர்மழிக்கும் சிறுகத்திகள் முதலியனபெருந்தொகையாக எடுக்கப்படுகின்றன. இந்த இந்து நாகரிகம் சுமேரிய நாகரிகத்தோடு காலத்தாலும் கலையறிவாலும் ஒத்திருக்கின்றதெனக் கருதப்படும். சுமேரியர் தமிழரோடு நெருங்கிய தொடர்புடையவர் என ஆராய்ச்சி வல்லுநர் கூறுப.

சிந்துதேயத்தில் வசித்த தசயுக்கள் பொன்னுபாணங்களை யணிந்து சீர்மைபெற்றிருத்தலை ஆரியர் கண்டு அழுக்காறுற்று அவர்களைக் கெடுக்கும்படி தம்தெய்வங்களைப் பரவினர் என வேத சுலோகங்கள் உரைக்கின்றன. இத்தசயுக்கள் திராவிடக் கூட்டத்தினரே.

இனிப் பலுச்சிஸ்தானத்தில் வதியும் ஒரு மக்கட் கூட்டத்தினர் பேசும் பிராகிமொழி தாய்மொழி ஒன்றுடன் மாத்திரம் ஒப்புமிகுந்துளதால் அம்மக்களும் தமிழ்க் கூட்டத்தினர் எனக் கருதப்படுவர்.

இனித் தமிழ்நாடு கடற்கோளால் சுருங்கிய தென்பது உண்மை. இலமூரியா என்னும் குமரிக்கண்டம் கடலால் கொள்ளப்பட்டது. கடற்கோள்கள் நிகழ்ந்தன என்பது களவியலுரையாலும் வலியுறுத்தப் படுகிறது. முதற் கடற்கோளின் முன் அகத்தியர் பாண்டியன் துணையோடு முதற்சங்கம் நிறுவித் தமிழ்மொழியைச் சீற்பெற செய்திருத்தல் கூடும். முதற்சங்கம் காய்ச்சின வழுதி முதற் கடுங்கோன் ஈறுக ஆண்ட 89 பாண்டியர் செங்கோலோச்சிய காலத்தில் நிலவியது. முதற் சங்கம் 4440 ஆண்டுகள் நிலைத்ததென்ப. முதற்சங்கத்திற் கவியரங்கேறிய புலவர்கள் 549 பேர் என்ப. அவருள் எழுவர் பாண்டியர். முதற் சங்கத்தின் இறுதிக் காலத்தில் நிலந்தருதிருவின் பாண்டியன் அவையில் தொல்காப்பியம் அரங்கேற்றப்பட்டது தொல்காப்பியர் காலத்திலே ஆரியர் வடநாடுகளிற் குடியேறினராகத் தமிழ்நாடு சிறுத்தது. அக்காலத்தில் பாண்டியர் தலைநகராகிய மதுரை கடலால் கொள்ளப்பட்டது.

இரண்டாங் கடற்கோள் கி. மு. ஐந்தாம் நூற்றாண்டுக்கு முன் நிகழ்ந்திருக்கவேண்டும். அக்கடற்கோளால் பஃறுளியாற்றினையுடைய 49 தமிழ்நாடுகள் அழிந்தன. அதன் பின்னர்க் கபாடபுரத்தில் இரண்டாம் தமிழ்ச் சங்கம் பாண்டியரால் நிறுவப்பட்டதாகும். அக்காலத்திலே ஆரியர் தமிழரோடு கலக்கத் தொடங்கினர். இடைச்சங்க புலவர்கள் 3700 பேர்; அங்கத்தவர் 59 பேர்; அரசர்கள் வெண்டேர்ச் செழியன் முதல் முடத்திருமாறன் ஈறுக 59 வேந்தர்களென்ப. மூன்றாம் கடற்கோள் கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் நிகழ்ந்ததென்ப.

"நெடியோன் குன்றமுந்
பௌவமுந் தமிழ்வரம் பறுத்த
தண்புன னாட்டு"

எனத் தமிழ் நாட்டெல்லை கூறினர் இளங்கோவடிகள். தன் நாடுகள் சிலவற்றைக் கடல் கொண்டதாகப் பாண்டியன் குண்டூர், முத்தூர் என்னும் இரு நாடுகளைச் சோழனிடம் பறித்தான். கடைச் சங்க காலந் தொட்டுத் தமிழ்நாடு வேங்கடத்தையும் கடலையும்எல்லையாகவுடைத்தாய் இருக்கின்றது. கடைச்சங்க காலத்தில் முடத்திருமாறன் முதல் உக்கிரப் பெருவழுதி வரையுள்ள 49 வேந்தர் 1850 ஆண்டு இப்போதுள்ள மதுரையில் ஆண்டனர். சங்கம் இரீ இய புலவர் 49 என்ப. அவருளிட்டு 449 புலவர் பாடினர்.

ஆரியர் தமிழ் நாட்டினரைத் தென்னவரெனவும திராவிடரெனவும் வழங்கினர்......

தமிழ் தெலுங்கு கன்னடம் துளு குடகு மலையாளம் என்னும் செப்பஞ் செய்யப்பட்ட ஆறு திராவிட மொழிகளுள் தமிழ் மொழியே தலை சிறந்ததாகும். செப்பஞ் செய்யப்படாத திராவிட மொழிகளும் பல உள. துடா, கோடா, கொண்ட், கூயி, ஓராயன், இராசமகால், பிராகி என்னும் பாஷைகள் தமிழினத்தைச் சேர்ந்தவை என அறிஞர் கால்டுவெல் துணிகின்றனர்.

ஆரிய பாஷையின் கலப்பினால் திராவிடமொழிகள் சில திரிபடைந்தன; சில அழிவெய்தின. ஆந்திரம் வேதத்திற் குறிக்கப்பட்டுளதாதலின் அதுதான் முதற் பிரிந்ததாகும்.

ஆரியர் இந்துநாடுகளிற்புகுந்தனராகத் திராவிடக் குழுவினர் சிலர் குன்றுகளில் ஒதுங்கினர். குன்றுகளில் ஒதுங்கியோர் பேசும் மொழிகள் செப்பஞ் செய்யப்படாத திராவிடமொழிகளாயின. ஆரியர் மெல்ல மெல்லத் தென்னாடு புகுந்தனராகக் கன்னடமும் துளுவும் குடகும் மலையாளமும் பிரிந்தன. மலையாள
கி. பி. பதினோராம் நூற்றாண்டி
தான் பிரிந்ததெனத் தெரிகிறது.

தமிழ் மிகப் பழையமொழியா
வின் ஆதிகாலத்தில் எழுதப் பெ
டைல் இருந்தன. தமிழ் மொழிகளை
சுட்டுதற்குப் பண்டைத் தமிழ
சித்திர வெழுத்துக்களை உபயே
கித்தனர். தமிழர் தாம் கருது
பொருள்களைப் படங் கீறிக் காட்
னர். அப்படங்களே உருவெழு
துக்களாயின. அவ்வுருவெழுத்து
களே புள்ளி கோடு முதலியவை
கத்திரிந்து ஒலியெழுத்துக்களி
குறியீடாயின. தமிழர் தம் ஒ
யெழுத்துக்களை வட்டெழுத்து
கள் எனப்பெயரிட்டனர். தமி
நாட்டுக் கல்வெட்டுக்கள் சில வ
டெழுத்துக்களில் எழுதப்பட்
ருத்தலை அறிக. ஆரியர் கலப்பின
இப்போதுள்ள கிரந்த எழுத்து
கள் வழங்கப்படுகின்றன.

தமிழ்நாடு பண்டு தொட்டு
பாண்டிமண்டலம் சோழமண்டல
சேரமண்டலம் எனப் பிரிக்கப்ப
டது. இம்மண்டலங்கள் நாடுகளா
கப் பிரிக்கப்பட்டன. சுத்தமாகவு
இலக்கணமுறையாகவும்பேசப்படு
தமிழ் செந்தமிழ் எனப்பட்ட
செந்தமிழ்நாடு வையையாற்றி
வடக்கும் மருதயாற்றின் தெற்
கருவூரின் கிழக்கும் மருவூரி
மேற்குமான எல்லைக்குட் பட்
நாடாகுமென்ப. இலக்கண மாபி
றிப் பேசப்படும் தமிழ் கொடு
தமிழ் எனப்பட்டது. கொடுந்தமி
நாடுகள் பன்னிரண்டென்பர்.

பண்டைக்காலத்துத் தமிழ
தொகை தெரிகின்றிலது. இக்
லத்துத் திராவிடர் தொகை வ
மாறு:

1931ல் எடுத்த கணக்கின்ப
தமிழர் 2,00,00,000. இரண்
கோடி மக்கள் எனக் காணப்பட்
னர். இலங்கைத் தமிழர் 15 இல
சம் எனக் கானப்பட்டனர். ஆந்
ரர் 2,60,00,000. எனவும், மலைய
ளத்தார் 90,00,000. எனவும்
துளுவர் 5,00,000. எனவும், கன்
னடர் 1,90,00,000. எனவும்கண
கிடப்பட்டனர்.

❀

Edited, Printed & Published by C. N. Annadurai M.A., at "Dravidanadu" Press,
95, Tirukkachinambi St., Kancheepuram.